# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 02 வள்ளுவர் ஆண்டு 2055 ஆடி 31 வெள்ளிக்கிழமை 16.08.2024 கதிர் 332







# காணாமல் ஆக்கப்பட்டோர் குறித்து யாழில் 3 இடங்களில் விசாரணை



## மேலும் இரண்டு நாட்கள் நடைபெறும்

காணாமல் போனோர் பற்றிய அலுவலகத்தினால் யாழ். மாவட்டத்தின் மூன்று பிரதேச செயலக பிரிவுகளை சேர்ந்த வலிந்து காணாமல் ஆக்கப்பட உறவுகளிடம் இன்று வெள்ளிக்கிழமை விசாரணைகள் இடம்பெற்றது.

உடுவில், கோப்பாய் மற்றும் தெல்லிப்பழை பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட மக்களிடையே விசாரணைகள் இடம்பெற்றது.

இவ்விசாரணைகள் காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தினால் உடுவில் பிரதேச செயலகத்தில் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

நாளை 17 ஆம் திகதி பருத்தித்துறை, மருதங்கேணி, கரவெட்டி பிரதேச செயலக பிரிவுகளை சேர்ந்த மக்களுக்கு பருத்தித்துறை பிரதேசசெயலகத்திலும் நடைபெறும்.

நாளை மறுதினம் 18 ஆம் திகதி யாழ்ப்பாணம், சங்கானை, சண்டிலிப்பாய், காரைநகர், நல்லூர், சாவகச்சேரி, 2 ➤

# கிருஷ்ணர் ஆலயத்தில் வழிபட அனுமதி



யாழ்ப்பாணம் – காங்கேசன்துறை மேற்கு கிராமசேவகர் பிரிவுக்குட்பட்ட கீரிமலை கிருஷ்ணர் ஆலயத்துக்குச் சென்று வழிபட இன்று அனுமதி வழங்கப்பட்ட நிலையில் பெருமளவிலான மக்கள் சென்று பொங்கல் பொங்கி சிறப்புப் பூஜை வழிபாடுகளில் ஈடுபட்டனர்.

கடந்த 34 வருடங்களுக்கும் மேலாக இராணுவத்தின் உயர்பாதுகாப்பு வலயத்தினுள்ளே கடற்படையினரின் கட்டுப்பாட்டிலே காணப்பட்ட பழமை வாய்ந்த கீரிமலை கிருஷ்ணர் ஆலய வழிபாடுகளுக்கு இன்று அனுமதி வழங்கப்பட்டநிலையில் அங்கு சென்ற பொதுமக்கள் ஆலயத்தைச் சிரமதானம் செய்து பொங்கல் 2 ➤

# ‘தேர்தலை புறக்கணியுங்கள்’ வவுனியாவில் துண்டுபிரசுரம்



ஜனாதிபதி தேர்தலை புறக்கணிக்க கோரி தமிழ் தேசிய மக்கள் முன்னணியினரால் வவுனியா நகரில் இன்றையதினம் துண்டு பிரசுரம் விநியோகிக்கப்பட்டது.

ஒற்றையாட்சி அரசியலமைப்பு நீக்கப்பட்டு சமஸ்டி அரசியலமைப்பு உருவாக்கப்படுவதற்கான உத்தரவாதம் வழங்கப்படும் வரைஜனாதிபதிதேர்தலை பகிஷ்கரிப்போம் என்ற தொனி பொருளில் குறித்த துண்டு பிரசுரம் விநியோகிக்கப்பட்டது.

இதன்போது தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராஜாகஜேந்திரன், கட்சியின்ஆதரவாளர்கள் என பலரும் கலந்துகொண்டிருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# நாகபட்டினம் – காங்கேசன்துறை கப்பல் சேவை ஆரம்பமானது

## 47 பயணிகளுடன் வந்த கப்பல்



வரலாற்று சிறப்புமிக்க நாகபட்டினம் – காங்கேசன்துறைக்கு இடையிலான பயணிகள் கப்பல் சேவை வெற்றிகரமாக இன்று ஆரம்பிக்கப்பட்டது.

நாகை மாவட்ட ஆட்சியர் ஆகாஷ், பாராளுமன்ற உறுப்பினர் செல்வராஜ், புதுச்சேரி உட்துறை அமைச்சர் நமச்சிவாய ஆகியோர் கொடி அசைத்து கப்பல் பயணத்தை தொடங்கி வைத்தனர்.

47 பயணிகளுடன் குறித்த கப்பல் இலங்கை காங்கேசன் துறைக்கு தனது பயணத்தை தொடங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கனடாவில் நினைவுத்தூபி: இலங்கை கடும் கண்டனம்

## தூதுவரை அழைத்து தெரிவித்தார் அமைச்சர் அலி சப்ரி



கனடாவின் பிரம்டனில் தமிழர் இனப்படுகொலை நினைவுத்தூபியை அமைப்பதற்கு அடிக்கல் நாட்டப் பட்டமைக்கு இலங்கை கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளது. இதற்கு இலங்கை வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி இலங்கைக்கான கனடா தூதுவரை இன்று அழைத்து தனது எதிர்ப்பை தெரிவித்துள்ளார்.

கனடாவின் வாக்குவங்கி அரசியலுக்காக தொடர்ந்து பரப்பப்படும் இந்த பொய்யான கதையை இலங்கை அரசாங்கம் திட்டவட்டமாக நிராகரிப்பதாக அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

பிராம்டன் நகரசபையின் தவறான ஆலோசனையின் அடிப்படையிலான செயற்பாடு இலங்கையில் உள்ள அமைதியை விரும்பும் அனைத்து மக்களையும் புண்படுத்துகின்றது என அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் இனப்படுகொலை இடம்பெற்றது என்ற குற்றச்சாட்டானது, தீங்கிழைக்கும் தவறான தகவல்களை அடிப்படையாக கொண்ட புனையப்பட்ட மற்றும் தேசிய சர்வதேச அளவில் எந்தவொரு பொறுப்பான அதிகாரியாலும் 2 ➤

# பொருளாதார மறுசீரமைப்பு என்ற பெயரில் மக்கள் மீது பெரும் சுமை

## ஐ.எம்.எப். நிபந்தனைகள் தளர்த்தப்படும் என்கிறார் சஜித்



நாடு தற்போது இயல்பு நிலையில் இருப்பதாக ஜனாதிபதி கூறினாலும், நாட்டில் உருவாகியிருப்பது புதியதொரு இயல்பு நிலையாகும். இதனால் நாட்டு மக்கள் தொழில்களை இழந்து, ஜீவனோபாயத்தினை இழந்துவறுமை நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதன் காரணமாகமக்கள்பெரும்கவலையில் இருக்கின்றனர். மக்களின் நுகர்வு, முதலீடு, சேமிப்பு மற்றும் உற்பத்தி ஆகியவை இல்லாமால் போயுள்ள காரணத்தினால் நாட்டின் ஏற்றுமதி பாரியளவு வீழ்ச்சியடைந்துள்ளது. இக்காரணத்தால்நாட்டின்புதியதொரு இயல்புநிலை உருவாகியுள்ளது என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேதமதாச தெரிவித்தார்.

கண்டி மல்வத்த மற்றும் அஸ்கிரி பீட மகா நாயக்க தேரரை இன்று காலைசந்தித்து ஆசிர்வாதம்பெற்றுக் கொண்டதன்பிற்பாடு ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் பார் உரிமம் வழங்குதல், ஏலம் மற்றும் மானியம் வழங்குதல் போன்ற கலாச்சாரங்கள் எம்மிடம் இல்லை. வாரிசு முறையில் அன்றி , 220 இலட்சம் மக்களின் வாக்குகளால் தான் புதிய ஜனாதிபதி தெரிவு செய்யப்படுவார். ஐக்கிய மக்கள் சக்தி அரசாங்கத்தில் மதுபானம் இல்லாத யுகமொன்றை உருவாக்க முயற்சிப்போம். அரசியல் சூதாட்ட முற்றாக நிறுத்தப்படும் என்றும் எதிர்கட்சித் தலைவர் சுட்டிக்காட்டினார்.

பொருளாதார மறுசீரமைப்பு என்று மக்கள் மீது எல்லையற்ற சுமைகளை சுமத்தி சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளை தளர்த்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதாகவும் மேலும் அவர் தெரிவித்தார்.

துன்பப்படும் நாட்டு மக்களை, துன்பங்களில் இருந்து விடுவித்து, நாட்டை அபிவிருத்திசெய்யும் அனைவருக்கும் சுபிட்சம் தரும் உயர்ந்த கலாச்சாரமும், நாகரீகமான சட்ட ஒழுங்கும் கொண்ட ஒரு நாடு உருவாக்குவோம் என்று எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

# வவுனியாவில் மின்சாரம் தாக்கி இளைஞர் ஒருவர் பரிதாபச் சாவு

வவுனியா, ஓமந்தை, ஆறுமுகத்தான்குளம் பகுதியில் விலங்குகளுக்காக வைக்கப்பட்டிருந்த மின்சாரம் தாக்கியதில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று ஓமந்தைப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் இன்று வெள்ளிக்கிழமை அதிகாலை இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

நேற்று வியாழக்கிழமை இரவு தனது வீட்டில் உறங்கிக் கொண்டிருந்த மகனை நீண்ட நேரமாகியும் காணாமையால் அவரது தந்தை தேடியுள்ளார். இதன்போது காணியின் பின்புறத்தில் மேற்படி இளைஞர் சடலமாகக் கிடந்தமை கண்டறியப்பட்டது.

சம்பவம் தொடர்பாக ஓமந்தைப் பொலிஸாருக்குத் தகவல் தெரியப்படுத்தப்பட்டது. சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் சடலத்தை மீட்டதுடன் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

இந்தச் சம்பவத்தில் பத்மநாதன் டயான் என்ற 21 வயது இளைஞரே சாவடைந்துள்ளார்.

அவர் வீட்டின் பின்புறத்தில் விலங்குகளுக்காக வைக்கப்பட்டிருந்த மின்சாரத்தில் சிக்கி உயிரிழந்துள்ளார் என்றுஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளதாக பொலிசார் மேலும் தெரிவித்தனர்.

# இளைஞர் ஒருவர் சுட்டுப் படுகொலை

## திருமலையில் அதிகாலை பயங்கரம்

திருகோணமலை, ஸ்ரீபுர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கம்மம்பில கிராமத்தில் பிள்ளையார் கோயில் சந்தியில் இன்று வெள்ளிக்கிழமை அதிகாலை இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவத்தில் ஸ்ரீபுர பகுதியைச் சேர்ந்த 26 வயதுடைய இளைஞரே உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர்வயல்காவலில்ஈடுபட்டிருந்தநிலையில், மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத இருவர் அவர் மீது மூன்று தடவைகள் ரி – 56 ரக துப்பாக்கியால் சுட்டுவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

மேற்படி நபர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார் என்று ஸ்ரீபுர பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணையை ஸ்ரீபுர பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

இந்தத் துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தில் டுபாயில் இருக்கும்போதைப்பொருள்கும்பல்தொடர்புபட்டிருக்கலாம் என்று ஸ்ரீபுர பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

### கிருஷ்ணர் ஆலயத்தில் ...

பொங்கி பூஜை வழிபாடுகளை மேற்கொண்டனர்.

நீண்ட காலத்தின் பின்னர் தமது ஆலயத்துக்குச் செல்ல அனுமதிக்கப்பட்டதை மிகவும் சந்தோசமாக வரவேற்ற பொதுமக்கள் ஆலயம் சிதைவடைத்திருப்பதைப் பார்த்துக் கடும் மனவேதனை அடைந்தனர்.

இதன்போது யாழ். மாவட்ட பதில் அரச அதிபர் ம.பிரதீபன், யாழ்.மாவட்ட மேலதிக அரச அதிபர் ஷ்ரீமோகன், செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகன், கடற்படை அதிகாரிகள், பொதுமக்கள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.

இன்று முதல் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் ஆலயத்துக்குச் சென்று மக்கள் வழிபட அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை, கிருஷ்ணர் ஆலயம் என்ற காரணத்தால் ஞாயிற்றுக்கிழமைகளிலும் விசேட தினங்களிலும் வழிபட பொதுமக்கள் அனுமதி கோரியதால் அது தொடர்பாக உரிய தரப்புக்களுடன் பரிசீலிப்பதாகவும், வலிகாமம் வடக்கிலுள்ள ஏனைய காணிகளை விடுவிக்கும் செயற்பாடுகள் தொடர்ந்தும் முன்னெடுக்கபட்டு வருவதாகவும் யாழ். மாவட்ட பதில் அரச அதிபர் பிரதீபன் தெரிவித்தார்.

### காணாமல் ஆக்கப்பட்டோர் .....

நெடுந்தீவு, ஊர்காவற்றுறை, வேலணை ஆகிய பிரதேச செயலக பிரிவுகளை சேர்ந்தோருக்கு யாழ்ப்பாண பிரதேச செயலகத்திலும் விசாணைகள் இடம்பெறவுள்ளன.

### கனடாவில்.........

நிரூபிக்கப்படாத குற்றச்சாட்டு என அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

இலங்கையில்கடந்தஇரண்டுவருடங்களாகபொருளதார நெருக்கடி நிலவிய போதிலும்,மோதல் முடிவிற்கு வந்த பின்னர் நல்லிணக்கத்தை வளர்ப்பதற்கும்,நிலையான சமாதானத்தை ஏற்படுத்துவதற்கும் இலங்கை அரசாங்கம் தொடர்ச்சியாக ஈடுபட்டுவருகின்றது என தெரிவித்துள்ள அலிசப்ரி கனடா அரசாங்கம் தலையிட்டு குறிப்பிட்ட நினைவுத்தூபியை கட்டுவதை தடுத்து நிறுத்தவேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ளார்.





செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட

காலைக்கதிர் TV
YouTube தளம்

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

# தென்னிலங்கையின் அரசியல் நகர்வுகள் குறித்து அவதானமாக இருக்க வேண்டும்

## சுரேஷ் பிரேமச்சந்திரன்



எம்மவர்களைக் கொண்டே எம்மைப் பிரித்தாண்டு எமது ஒற்றுமையை சிதைத்து, எமது அபிலாசைகளைக் குழிதோண்டிப் புதைத்து எம்மீது மீண்டும் ஒடுக்குமுறைகளை மேற்கொள்வதற்கு எம்மிடமே ஆணை பெறுவதற்கு தென்னிலங்கை அரசியல்வாதிகள் முயற்சிக்கின்றனர். எனவே நாம் விழிப்புடன் இருந்து எம்மை பலியிடத் துடிக்கும் சக்திகளைப் புறந்தள்ளி அவர்களின் விருப்பம் நிறைவேறாமல் பார்த்துக்கொள்ள வேண்டும் என்று ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் க. பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

அண்மையில் தமிழரசுக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் வெளியிட்டுள்ள கருத்துகளுக்கு பதிலளித்து அவர் வெளியட்டுள்ள அறிக்கையின் விபரம் வருமாறு:

“2024ஆம் ஆண்டிற்கான ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்களின் வாக்குகளைப் பெற்றுக்கொள்வதற்காக அதன் முக்கிய வேட்பாளர்களான ரணில் விக்கிரமசிங்க, சஜித் பிரேமதாச, அனுரகுமார திஸ்ஸநாயக்க போன்றோர் அடிக்கடி வடக்கு-கிழக்குக்கு வருவதும் அங்குள்ள பல்வேறு கட்சிகளையும் தனிநபர்களையும் சந்தித்துப் பேசுவதும் இப்பொழுது கிரமமாக நடைபெற்று வருகின்றது.

2024ஆம் ஆண்டின் ஆரம்பத்திலிருந்து தமிழர் தரப்பில் ஒரு பொது வேட்பாளரை நிறுத்துவது தொடர்பாக ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணிக்குள் பல சுற்றுப் பேச்சுகள் நடைபெற்றன. தமிழ்பொது வேட்பாளர் ஒருவரை நியமிப்பது தொடர்பாக ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டதுடன் பொது வேட்பாளரை நிறுத்துவது என்ற இலக்கை நோக்கி முன்னேறினர்.

இந்தக்காரணங்களினால் அச்சமடைந்துள்ள தென்னிலங்கை ஜனாதிபதி வேட்பாளர்கள் தமிழ் மக்களின் வாக்குகளை எப்படியாவது பெற்றுவிட வேண்டும் என்ற நோக்கில் பலமுனைகளிலும் காய்நகர்த்தல்களை மேற்கொள்கின்றனர். இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி சுமந்திரன் தனிநபராக தனது கட்சியினரின் ஒப்புதலோ அல்லது தமிழ் மக்களின் ஒப்புதலோ இல்லாமல் தான் ஜனாதிபதியுடன் பேசுகிறேன் என்று கூறுவதும் பதின்மூன்றை அவர் முழுமையாகத் தந்துவிடப்போகிறார் என்று சாரப்பட கருத்துகளை வெளியிடுவதும் தேர்தலில் மக்களை பிழையான பாதைக்கு இட்டுச் செல்வதற்கான ஒரு முயற்சியாகும்.

தமிழ் மக்களது உரிமைகளைப் பெற்றுக்கொள்வதற்காக இந்த ஜனாதிபதித் தேர்தல் களத்தைப் பாவிக்க வேண்டும் என்ற ஒரே காரணத்திற்காக தமிழ் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்த வேண்டும் என்பதே தமிழர் தரப்பின் நோக்கமாகும். ஆனால் அதனை எதிர்த்து நிற்பது போன்ற தோற்றத்தைக் காட்டி நிற்கும் சுமந்திரன் அவர்கள் தமிழ் பொது வேட்பாளர் என்ற எண்ணக்கருவை முன்னிறுத்தியே இந்த பேச்சு வார்த்தைகளை நடாத்தி வருகின்றார்.

சுமந்திரனுக்கு பேச்சுவார்த்தைகள் தொடர்பாக குறைந்தபட்ச அனுபவங்களாவது இருக்கும் என்று நான் கருதுகின்றேன். மகிந்த ராஜபக்ஷ தரப்புடன் பதினேழு சுற்றுப் பேச்சுகள் நடாத்தப்பட்டு அவை எவ்வாறு தோல்வியில் முடிந்தது என்பது அவருக்குத் தெரியும். இதே போன்று நல்லாட்சி காலத்தில் இதே ரணில் விக்கிரமசிங்க அவர்களது தலைமையில் புதிய அரசியல் சாசனத்திற்காக நான்கு வருடங்கள் பேசி அது எவ்வாறு தோல்வியில் முடிந்தது என்பதும் அவருக்குத் தெரியும்.

அதன்பின்னர், ரணில் விக்கிரசிங்க ஜனாதிபதிப் பொறுப்பை ஏற்றதன் பின்னர் பதின்மூன்றாவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதற்கு நீங்கள் அனைவரும் தயாரா என்று கேட்டபொழுது மகிந்த ராஜபக்ஷ உட்பட அனைவரும் அதற்கு ஆதரவு தெரிவித்தார்கள். ஆனால் அதன் பின்னர் அது தொடர்பாக ரணில் விக்கிரமசிங்க எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை.

ரணில் விக்கிரமசிங்க இந்தியா சென்ற சமயத்திலும் இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெயசங்கர் இலங்கை வந்த சமயத்திலும் பதின்மூன்றை முழுமையாக நிறைவேற்றும்படி வற்புறுத்தியும்கூட அப்பொழுதும் எதுவும் செய்யவில்லை. கடந்த இரண்டு வருடங்களாக நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதியாக இருக்கின்ற ரணில் விக்கிரசிங்கவினால் அரசியல் சாசனத்தில் காணப்படும் பதின்மூன்றாவது திருத்தத்தில் உள்ள ஒருபகுதியைக்கூட நிறைவேற்றுவதற்கு எவ்வித நடவடிக்கையையும் மேற்கொள்ளாத நிலையில், சுமந்திரன் போன்றோர் தொடர்ச்சியாக ரணிலை சந்திப்பதும் மாகாணசபை அதிகாரங்கள் அனைத்தையும் அவர் கொடுப்பார் போன்ற அறிக்கையை வெளியிடுவதும் தமிழ் மக்களை தவறான பாதைக்கு வழிநடத்தும் ஒரு முயற்சியாகும். ”

இவ்வாறு சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.




## கல்முனை சாதனை 22 போட்டிகள் மாகாண மட்டத்திற்கு தெரிவு !

(நூருல் ஹுதா உமர்)

மாவட்ட மட்ட தமிழ் மொழித் தினப் போட்டிகளில் கல்முனை கல்வி வலயம் வரலாற்று சாதனை புரிந்துள்ளது. வியாழக்கிழமை திருக்கோவிலில் நடைபெற்ற 38 அரங்கப் போட்டிகளில் 22 முதலாம் இடங்களைப் பெற்று மாகாணப் போட்டிக்கு தெரிவாகியுள்ளது 38 போட்டிகளில் 37 போட்டிகளுக்கு 22 முதலிடங்கள், 09 இரண்டாம் இடங்கள், 07 மூன்றாம் இடங்கள் அடங்களாக முதல் மூன்று இடங்கள் கிடைத்துள்ளன. கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ்.ச/ஹதுல் நஜீம் அவர்களின் தொடரான ஆலோசனை வழிகாட்டல் மற்றும் நேரடிப் பங்கு பற்றுதலால் கல்முனை வலயம் இச் சாதனையை நிலை நிறுத்தி இருக்கிறது.

கல்வி முகாமைத்துவத்திற்கு பொறுப்பான பிரதி கல்விப் பணிப்பாளரும் தமிழ் பாடத்திற்கான உதவிக் கல்விப் பணிப்பாளருமான யூ.எல்.றியால் அவர்களின் திட்டமிட்ட முன்னேற்பாடுகளுக்கான வெற்றிகளே இவை என்றும் கல்வி அபிவிருத்திக்கான பிரதி கல்விப் பணிப்பாளரும் தமிழ் மொழித் தின போட்டிகளின் நிறைவுறல் வரை மிகப் பாரிய பங்களிப்புகளை நல்கிய எம்.எச்.றியாஸா அவர்களின் அயராத ஒத்துழைப்புகள் வெற்றியின் பங்களிப்பில் குறிப்பிடத்தக்கவை.

மேலதிக வழிகாட்டல்களையும் ஒத்துழைப்புகளையும் வழங்கிய பிரதி கல்விப் பணிப்பாளர் எம்.எச்.எம். ஜாபிர், கோட்டக் கல்விப் பணிப்பாளர்கள், உதவி கல்விப் பணிப்பாளர்கள், வளவாளர்கள் அனைவருக்கும் மனம் நிறைந்த நன்றிகள் என கல்முனை வலய தமிழ் மொழித் தின குழு செயலாளர் ஜெஸ்மி எம்.மூஸா ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளார்.

மாணவர்களை வழி காட்டியதுடன் போட்டிகள் முடியும் வரை ஒத்துழைப்பு வழங்கிய அதிபர்கள், பயிற்றுவித்த ஆசிரியர்கள், பங்கெடுத்த மாணவர்கள் அனைவருக்கும் விஷேடமான நன்றிகள் என தெரிவித்த அவர் மாகாண மட்டத்திலும் இலக்குகளை எட்ட பிரார்த்தனைகள் செய்வதாகவும் தெரிவித்துள்ளார்.

# கட்சி என்ற ரீதியில் செயற்படாது தமிழினமாகச் செயற்படுங்கள்

## அழைப்பு விடுக்கிறார் விக்னேஸ்வரன்



"இன்றிலிருந்து ஜனாதிபதித் தேர்தல் முடிவடையும் வரையில் கட்சி என்ற ரீதியாக செயற்படாது தமிழினமாக செயற்பட்டு தமிழ் பொது வேட்பாளருக்கு ஆதரவாக அணிதிரண்டு எமது தனித்துவத்தை நிஷரூபிக்க வேண்டும்" என்று தமிழ் மக்கள் கூட்டணியின் செயலரும் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் அறைகூவல் விடுத்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கட்சிகள், தமிழ் மக்கள் பொதுச் சபை பிரதிநிதிகளை உள்ளடக்கிய தமிழ் பொதுக் கட்டமைப்பினரால் ஜனாதிபதி வேட்பாளராக களமிறக்கப்பட்டுள்ள பா.அரியநேத்திரன் தேர்தல் ஆணைக்குழுவில் வேட்பு மனுத் தாக்கல் செய்த பின்னர் ஊடகங்களுக்கு கருத்து கூறும் போதே இவ்வாறு விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

நியமனப் பத்திரத்தைத் தாக்கல் செய்வதற்காக அரியநேத்திரனுடன், சி.வி.விக்னேஸ்வரனும், அவரது கட்சியைச் சேர்ந்த சிற்பரனும் கூடச் சென்றிருந்தார்கள்.

விக்னேஸ்வரன் மேலும் தெரிவிக்கையில், "இதுவரையில் தமிழ் பொது வேட்பாளர் தொடர்பில் சில கருத்துக்கள் இருந்திருக்கலாம். ஆனால் இன்றிலிருந்து எதிர்வரும் செப்டம்பர் 21 ஆம் திகதி வரை கட்சி ரீதியாக செயற்படாது தமிழினமாக தமிழ் மக்கள் எமது தமிழ் பொது வேட்பாளருக்கு ஆதரவாக அணிதிரண்டு எமது தனித்துவத்தை நிஷரூபிக்க வேண்டும்" என்று அழைப்பு விடுத்தார்.

"தமிழ் பொது வேட்பாளர் 6 இலட்சம் வாக்குகளைப்பெற்றால் கூடபோதும். கட்சி ரீதியான சிந்தனைகளைத் தவிர்த்து நாம் தமிழினம், தமிழ் மக்கள் என்ற ரீதியில் சிந்திப்போமானால், இது ஒன்றும் பெரிய இலக்கல்ல" என்று தெரிவித்த விக்னேஸ்வரன், "எமது தனித்துவத்தை உறுதிப்படுத்த வேண்டும். தமிழ் மக்களுக்கு தனித்துவமான அரசியல் இருக்கின்றது என்பதனை உறுதிப்படுத்த வேண்டும்" என்றும் வலியுறுத்தினார்.

"செப்டம்பர் 21 ஆம் திகதி தமிழ் மக்கள் தமிழினமாக அணி திரண்டு தமிழ் பொது வேட்பாளருக்கு வாக்களிக்க வேண்டும். எனவே கருத்து முரண்பாடுகள், கட்சி நிலைப்பாடுகளை புறம்தள்ளி தமிழ் பொது வேட்பாளருக்காக ஓரினமாக அணிதிரள வேண்டும்" என்று விக்னேஸ்வரன் மேலும் தெரிவித்தார்.

# கட்சி முடிவை மீறியோர் மீது கடும் நடவடிக்கை

## மொட்டுவின் ஒழுக்காற்றுக் குழு முடிவு

பொதுஜன பெரமுன வேட்பாளர் சார்பில் வேட்புமனு தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில் கட்சியின் தீர்மானத்தை மீறி செயற்படும் உறுப்பினர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கு பொதுஜன பெரமுன தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கட்சியின் தீர்மானத்திற்கு எதிராக செயற்பட்ட சகல நாடாளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் மாகாண சபை உறுப்பினர்கள் மற்றும் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் மீது நடவடிக்கை எடுப்பதே இதன் நோக்கமாகும்.

ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்புமனுக்கள் சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர் ஒழுக்காற்று சபையைக் கூட்டுவதற்கு திட்டமிடப்பட்டது. இதன்படி ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளராக கட்சியின் தேசிய அமைப்பாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ச வேட்புமனு தாக்கல் செய்துள்ளார்.

இதனால் கட்சியின் தீர்மானத்துக்கு எதிராக செயற்பட்டவர்கள் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்காக ஒழுக்காற்று சபையை கூட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பல தடவைகள் கட்சியில் இருந்து வெளியேறிய பல நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதி தேர்தலில் பல்வேறு வேட்பாளர்களின் வெற்றிக்கு ஆதரவளித்துள்ளதாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தெரிவித்துள்ளது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதித் தேர்தல் பிரசாரக் கூட்டம் எதிர்வரும் 21ஆம் திகதி அநுராதபுரத்தில் நடைபெறவுள்ள நிலையில் ஒழுக்காற்று சபையை கூட்சூடும் தீர்மானம் முக்கிய தாக்கத்தை செலுத்துமென எதிர்பார்க்கப்படுகின்றது.







# பெண் வேட்பாளர்கள் யாரும் இல்லாத ஜனாதிபதி தேர்தல்

## கள நிலவரத்தின் விசேட அம்சங்கள்

செப்டம்பர் 21ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தல் வரலாற்றில் அதிக வேட்பாளர்கள் போட்டியிடும் அதேவேளையில் விசேட அம்சங்கள் பலவற்றைக் கொண்டதாக அமையவுள்ளது.

பிரதான வேட்பாளர்களில் ஒருவர் சுயேச்சையாக போட்டியிடும், கடந்த காலங்களை விடவும் அதிகளவாக நாடாளுமன்ற உறுப்பினர்கள் வேட்பாளர்களாக களமிறங்கியுள்ள, பெண் வேட்பாளர் இல்லாத மற்றும் முன்னாள் ஜனாதிபதிகளின் மகன்மார்கள் போட்டியிடும் தேர்தலாக இம்முறை நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தல் அமைகின்றது.

பிரதான வேட்பாளர்களில் ஒருவராக கருதப்படும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அரசியல் கட்சியின் வேட்பாளராக அன்றி சுயேச்சை வேட்பாளராக போட்டியிடுகின்றார். 1999 மற்றும் 2005 ஆம் ஆண்டுகளில்

நடைபெற்ற ஜனாதிபதி தேர்தல்களில் ஐக்கிய தேசியக் கட்சியின் யானை சின்னத்தில் போட்டியிட்ட ரணில் விக்கிரமசிங்க, 19 வருடங்களில் பின்னர் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுகின்றார். ஆனால், அரசியல் கட்சியில் போட்டியிடாது சுயேச்சை வேட்பாளராக களமிறங்கியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை இம்முறை தேர்தலில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஐந்து பேர் வேட்பாளர்களாக களமிறங்கியுள்ளனர்.

சஜித் பிரேமதாச, நாமல் ராஜபக்ஷ, விஜேதாச ராஜபக்ஷ, சரத் பொன்சேகா மற்றும் ரொஷான் ரணசிங்க ஆகியோர் போட்டியிடுகின்றனர். அதேபோன்று இம்முறை முன்னாள் ஜனாதிபதிகளின் இரு மகன்மார்கள் தேர்தலில் போட்டியிடுகின்றனர். முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசவின் மகனான சஜித் பிரேமதாச ஐக்கிய மக்கள் சக்தி வேட்பாளராகவும், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் மகன் நாமல் ராஜபக்ஷ பொதுஜன பெரமுனவின் வேட்பாளராகவும் கள மிறங்கியுள்ளனர்.





## "புழுதிக்கதைகள்" அனுபவப்பகிர்வு நூல் வெளியீட்டு நிகழ்வு

கிளிநொச்சி இரத்தினபுரத்தைச்சேர்ந்த ஓய்வு நிலை தொழில்நுட்ப உத்தியோகத்தர் சிவ.திருக்கேதீஸ்பரன் எழுதிய புழுதிக் கதைகள் அனுபவப்பகிர்வு நூல் வெளியீட்டு நிகழ்வு கிளிநொச்சி கூட்டுறவாளர் மண்டபத்தில் நேற்று பிற்பகல் நடைபெற்றது.

மாவட்ட சமுர்த்தி திணைக்கள பதில் பணிப்பாளர் அ.கேதீஸ்வரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக கரைச்சி பிரதேச செயலாளர் த.முகுந்தன் சிறப்பு விருந்தினராக யாழ் பல்கலைக்கழக விரிவுரையாளர் எஸ்-சிவகுமார், சின்யா மிஷன் கிளிநொச்சி வதிவிட ஆசாரி சிவேந்திர சாத்தானியா, ஓய்வு நிலை அதிபர், ஆசிரியர்கள், பொது அமைப்புக்களைச் சேர்ந்தோர், கலைஞர்கள், ஊடகவியலாளர், என பலரும் கலந்து கொண்டனர்.

புழுதிக்கதைகள் நூல் வட்டக்கச்சி மண்ணின் பெருமையை குறிப்பிடுகிறது. (113)

## கட்சி உட்கட்டமைப்பை பலப்படுத்தும் முஸ்லிம் காங்கிரஸ்!



(நூருல ஹுதா உமர்)

அம்பாறை மாவட்டம் சம்மாந்துறை மட்டக்களப்பு தரவை - 2 ம் கிராம சேவகர் பிரிவுக்கான சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கிளை புனரமைப்புக் கூட்டம் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதித் தலைவரும்,முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஐ.எம்.மன்சூர் தலைமையில் நேற்று சம்மாந்துறையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் பிரதி தேசிய அமைப்பாளரும், முன்னாள் கிழக்கு மாகாண அமைச்சருமான எம்.எஸ். உதுமாலெப்பை, உச்சபீட உறுப்பினரும், அம்பாறை மாவட்ட குழுவின் செயலாளருமான கல்முனை மாநகர சபை முன்னாள் உறுப்பினர் ஏ.சீ. சமால்டீன் , சம்மாந்துறை பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர்களான ஐ. நளீம், ஐ.எல். நளீம், சம்மாந்துறை மத்திய குழு செயலாளர், எம்.எஸ். எம். அசாருதீன் மற்றும் கட்சியின் முக்கியஸ்தர்களும் கலந்து கொண்டனர்.

இதன்போது கட்சியின் கட்டமைப்பு, தேர்தல் நடவடிக்கைகள், எதிர்கால கட்சி நடவடிக்கைகள் தொடர்பில் விரிவாக கலந்துரையாடப்பட்டது.



# ஈழத்திலிருந்து உலகத் தரம் வாய்ந்த பிரம்மாண்ட படைப்பு குமரி கண்ட குமரன்






தமிழ்க்கடவுள் முருகனின் வரலாறையும் தற்கால நிகழ்வுகளையும் இணைந்தவாறு குமரி கண்ட குமரன் எனும் பாடல் ஈழத்து இளைஞர்களால் வெளியீடு செய்யப்பட்டு அனைவரது கவனத்தையும் இணையத்தில் ஈர்த்துள்ளது. புத்தி கெட்ட மனிதரெல்லாம் மற்றும் டக் டிக் டோஸ் போன்ற வெற்றிப்படங்களை கொடுத்த குழுவிடம் இந்த படைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. இதற்க்கான நிதியினை மக்களிடமிருந்தே சேகரித்துள்ளனர்.

"குமரி கண்ட குமரன்" என்ற பாடல், தமிழரின் தொன்மையான நிலமையான குமரி கண்டம் நிலவிய காலத்திற்குத் திரும்பி, அவ்வழியிலே பயணிக்கச் செய்கிறது. சமுத்திரத்தில் மறைந்ததாகக் கூறப்படும் குமரி கண்டத்தின் கதை, மற்றும் அதில் வாழ்ந்த தமிழர்களின் போராட்டம், தைரியம் மற்றும் முருகன் எனும் தெய்வத்தின் மீது அவர்கள் கொண்ட நம்பிக்கை ஆகியவை பாடலில் புலப்படுகின்றன.

இந்த பாடலின் வரிகள், குமரனின் கதையை, தமிழர் மக்களின் போராட்டம், தைரியம், மற்றும் அவர்களின் புனித ஆற்றலின் அடையாளமாக விளங்கும் முருகனைச் சித்தரிக்கின்றன. அவற்றை கமல் அபரன் மற்றும் சாந்தகுமார் எழுதியுள்ளனர்.

பூவன் மதீசனின் கருவில் அவரே இசையமைத்துள்ள இந்த பாடல், கோகுலன் சாந்தன் சத்தியன் உள்ளிட்ட பல்வேறு குரல் கலைஞர்கள் இணைந்து பாடியதன் மூலம், ஈழத்தின் இசை வடிவத்தை பிரதிபலிக்கின்றது. இசையின் மேலதிக நுட்பங்களையும் ஒளிச்சமபடுத்தல்களையும் இசை மேம்படுத்தல்களையும் சாயீதர்ஷன் மேற்கொண்டுள்ளார்.

ராஜ் சிவராஜ் இயக்கிய இந்த வீடியோ, தமிழர் கலாச்சாரத்தின் அழகும் ஆழமும் கொண்ட காட்சிப் பொழிவாக உருவாக்கப்பட்டுள்ளது.

ஏ கே கமல் அவர்களின் ஒளிப்பதிவு, அருணின் படத்தொகுப்பு மற்றும் குணரத்தினம் வாசிகரன், தாரு மற்றும் சத்யஜித் ஆகியோரின் ஒத்துழைப்புடன், குமரனின் கதையை உயிரோட்டமாக்குகின்றது. வி.எஸ். சிந்துவின் கலை இயக்கமும், முகமது நவீத் ஒழுங்கமைத்த நடனமும், தமிழர் மரபுகளையும், நம் மண்ணுக்கான காலமற்ற இணைப்பையும் பிரமிக்க வைக்கின்றன. முருகனாக வரும் தர்மலிங்கமும் தனது பங்கை செவ்வனே செய்திருக்கின்றார்.

"குமரி கண்ட குமரன்" தமிழர் கலாச்சாரம், வரலாறு மற்றும் அரசியல் ஆகியவற்றில் ஆர்வம் கொண்ட அனைவரும் கண்டுகளிக்க வேண்டிய வீடியோ ஆகும். இது நம் எதிர்காலத்தையும் புத்துணர்வுடன் நினைவூட்டுகிறது.

நம் பாரம்பரியம் மற்றும் கலாச்சாரத்தை பாதுகாக்கவும், கொண்டாடவும், நம்பிக்கையையும், சமூக ஒற்றுமையையும், கலைகளையும் கொண்டாடும் பேராண்மையை மெய்ப்பிக்கிறது. மக்களுக்காக போராடிய தலைவர்கள் தெய்வமாக்கப்பட வேண்டியவர்கள் எனும் தொனிப்பொருளை இது விட்டுச்செல்வதாகவும் இருக்கிறது.









## நாடாளுமன்ற அமர்வு 21 ம் திகதி நடைபெறும்

ஓகஸ்ட் மாத இரண்டாம் அமர்வு வாரத்துக்கான நாடாளுமன்ற அமர்வை 21 ஆம் திகதி புதன் கிழமை மாத்திரம் கூட்டுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கூடிய நாடாளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்திலேயே இவ்வாறு தீர்மானிக்கப்பட்டதாக நாடாளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர தெரிவித்தார்.

அதற்கமைய, ஓகஸ்ட் 21 ஆம் திகதி புதன்கிழமை காலை 9.30 மணி முதல் 10.30 வரை வாய்மூல விடைக்கான வினாக்களுக்காக நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது.

## கலைப்பீட மாணவர் ஒன்றிய தலைவராக சோமபாலன் தெரிவு

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் கலைப்பீட மாணவர் ஒன்றியத்தின் புதிய தலைவராக மனோகரன் சோமபாலன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கலைப்பீட மாணவர் ஒன்றியத்திற்கு புதிய தலைவர் மற்றும் நிர்வாக உறுப்பினர்களை தெரிவு செய்யும் தேர்தல் கலைப்பீட மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நடைபெற்றது.

இதன்போது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கலைப்பீட மூன்றாம் வருட மாணவர்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பிரதான வளாகத்தில் நடைபெற்ற தேர்தலில் வாக்களித்துள்ளனர்.

இதன்போது வேட்பாளர்களாக இளங்கணேசன் தர்சிகா, மனோகரூரன் சோமபாலன் ஆகிய இருவரும் போட்டியிட்டனர்.

ம.சோமபாலன் 326 வாக்குகளையும் இ.தர்சிகா 50 வாக்குகளையும் பெற்றனர். இதன்படி அதிக வாக்குகளை பெற்ற ம.சோமபாலன் கலைப்பீட மாணவர் ஒன்றியத் தலைவராக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

## பாடசாலை விடுமுறை இன்று ஆரம்பமாகிறது

இந்த ஆண்டுக்கான இரண்டாம் தவணை பாடசாலை கற்கைகள் நிறைவடைவது தொடர்பாக கல்வி அமைச்சினால் அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

அதன்படி, பாடசாலைகளின் இரண்டாம் தவணை ஆகஸ்ட் இன்று வெள்ளிக்கூகிழமையுடன் முடிவடைகிறது.

இதேவேளை, மூன்றாம் தவணைக்கான கல்வி செயற்பாடுகள் எதிர்வரும் ஆகஸ்ட் 26ஆம் திகதி மீண்டும் ஆரம்பிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.


JRIDE
BEYOND THE ROAD
Safety and comfort are our concern
ஜேரைட்
JRIDE
TAXI APP FROM JAFFNA
இலங்கை முழுவதும் | Islandwide
DOWNLOAD PASSENGER APP
ஆட்டோ கட்டணங்களால் ஆதங்கப்படுகின்றீர்களா?
கவலையினை விடுங்கள்.
நாங்கள் தயாராகிவிட்டோம்!
யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Taxi App)
YOU CAN EASILY REGISTER & BOOK YOUR RIDE
Google Play
App Store
வாகன உரிமையாளர்களே ஓட்டுனர்களே!
உங்கள் தனிப்பட்ட மற்றும் வாடகை வாகனங்களை பயன்படுத்தி உங்கள் வருமானத்தை அதிகரிக்க ஒரு தீர்வு!
இதுவரை பதிவு செய்யாதவர்கள் JRide Driver செயலியில் இலகு முறையில் கணக்கை பதிவு செய்து உங்கள் சேவையை தொடங்கலாம்!
DOWNLOAD DRIVER APP
YOU CAN EASILY REGISTER & ADD YOUR VEHICLE
Google Play
App Store
SCHEDULED BOOKING
New Feature
புதிய வசதி
விமான நிலையத்திற்கு / விமான நிலையத்தில் இருந்து வாகனம் தேவையா?
JRIDE TAXI APP
SPEED IT NET
பரமேஸ்வரா சந்தி,
134, பலாலி வீதி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
+94 703 563213
www.jride.lk
மகிழ்ச்சியான பயணம் திருப்தியான கட்டணம்!